பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 05 2025 **FRIDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சிறந்த செவிலியர்களுக்கான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. பீகார் மற்றும் உத்தரபிரதேசத்தில் சுமார் 69 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

3. இந்தியா நியூசிலாந்து இடையேயான இருதரப்பு உறவுகள் வலுவடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

5. ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

<<<<<<>>>>>>

சிறந்த செவிலியர்களுக்கான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் அவர் விருதுகளை வழங்கவுள்ளார்.

சிறப்பாக செயலாற்றும் செவிலியர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சகத்தின் சார்பில் 1973ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

பீகார் மற்றும் உத்தரபிரதேசத்தில் சுமார் 69 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

பீகாரின் **Karakat**-ல் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் 48 ஆயிரத்து 520 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

மின்சாரம், ரயில்வே உள்ளிட்ட துறைகளில் தொடங்கப்படும் இந்த திட்டங்கள் பீகாரின் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்க உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இன்று பிற்பகல் உத்தரபிரதேசத்தின் கான்பூர் செல்லும் பிரதமர், 20 ஆயிரத்து 900 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டவுள்ளார்.

கான்பூர் மெட்ரோ ரயில் திட்டத்தின் புதிய பிரிவுக்கு அடிக்கல் நாட்டும் அவர், மற்றொரு பிரிவின் சேவையை தொடங்கி வைக்கிறார்.

மின்சாரம், சாலைப் போக்குவரத்து, கழிவுநீர் சுத்திகரிப்பு உள்ளிட்டவை தொடர்பான திட்டங்களையும் இந்த நிகழ்ச்சியின் போது பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

மூத்த குடிமக்களுக்கான ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டம், சூரியமின்சக்தி திட்டம் ஆகியவற்றின் பயனாளிகளுக்கு திரு. நரேந்திர மோடி சான்றிதழ் மற்றும் காசோலைகளை வழங்கவுள்ளார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு சூழல் குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

ஜம்முவில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அமர்நாத் யாத்திரைக்கான ஏற்பாடுகள் குறித்தும் அவர் ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இக்கூட்டத்தில் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

காசநோய் ஒழிப்பு இயக்கம் தொடர்பாக 8 மாநிலங்களின் சுகாதார அமைச்சர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், காசநோய் ஒழிப்புத் தொடர்பான 100 நாள் இயக்கத்தின் மூலம் 12 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில் 7 லட்சம் பேருக்கு நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருதாக அமைச்சர் தெரிவித்தார்.

காசநோய் ஒழிப்பை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்றும் இதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்றும் திரு. ஜெபி. நட்டா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

இந்தியா நியூசிலாந்து இடையேயான இருதரப்பு உறவுகள் வலுவடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள நியூஸிலாந்து துணைப் பிரதமர் திரு. **Winston Peters** புதுதில்லியில் நேற்று திரு. ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் அமைதிக்கும், வளர்ச்சிக்கும் இருநாடுகளும் இணைந்து பணியாற்ற உறுதிபூண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு உறுதியான ஆதரவை வழங்கியுள்ள நியூஷிலாந்துக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை திருப்தியளிப்பதாகவும் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

**(Sound Byte – Music – 12 Sec)**

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற மேஜர் தன் சிங் தாபா குறித்த வீரதீர சாதனைகள் . . .

**(Voice Over / Closing Music – 100 Sec)**

<<<<<<>>>>>>>

ஆப்பரேஷன் சிந்தூர் தொடர்பாக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழுவினர், பல்வேறு நாடுகளுக்கு சென்று, இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்து வருகின்றனர்.

பிஜேபி உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர் டென்மார்க் சென்றடைந்தனர்.

அங்கு அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியில் கட்சி பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோரை இக்குழுவினர் சந்தித்து பேசினர்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினரையும் இக்குழுவினர் சந்தித்து பேசினர்.

சிவசேனா உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழு, சியாராலியோன் சென்றது.

அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. மொனா பிரிமாவை இக்குழுவினர் சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தோருக்கு நேற்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் இந்தியாவிற்கு ஆதரவு அளிப்பதற்காக சியாராலியோன் அரசுக்கு திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே நன்றி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான், ஜம்மு காஷ்மீரில் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்க நிகழ்ச்சியில் இன்று பங்கேற்கிறார்.

விவசாயிகளுக்கு தொழில்நுட்பம் சார்ந்த ஆலோசனைகளை வழங்கும் வகையில், அதற்கான குழுக்களும் இந்த பிரச்சார இயக்கத்தில் பங்கேற்கவுள்ளன.

வேளாண்மை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் இந்த பிரச்சார இயக்கத்தில் பங்கேற்று, விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

<<<<<<>>>>>>

நெல் மற்றும் பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளதற்கு விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனார்.

இது தங்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று தமிழகத்தின் அரியலூர் மாவட்ட விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - விவசாயிகள் 40 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

தென்கொரியாவின் குமி-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று ஆடவர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர் நீளம் தாண்டுதல் பிரிவில் **Ancy Sojan** வெள்ளிப்பதக்கத்தையும், **Shaili Singh** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**<<<<<<>>>>>>>**

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கிரிஷ் தியாகி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>>**